31.01.2024

O.S.No. 111/2012

வா.சா.1 .திரு.துரைச்சாமி த.பெ.வெள்ளைச்சாமி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் இட்டதாக நான் கூறியுள்ளதால், அந்த சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தில் எனது தந்தையின் கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. அதில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் எனது தந்தையுடையதுதான். எனக்கு, எனது தந்தை சாட்சி கையொப்பம் செய்தது நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். இந்த உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தந்தையின் கையொப்பம்தான் என்று ஒப்பீடு செய்வதற்கு எனது தந்தை உயிரோடு இருந்த போது கையொப்பம் இட்ட ஆவணம் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பழனியப்பனும், நானும் உறவினர்கள் என்றால் சரிதான், அவர் எனது மாமா ஆவார். நான் 1ம் பிரதிவாதியின் மகளைதான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தை மோசடியாக தயாரித்து தாக்கல் செய்திருந்தார் என்றாலும், அவர் எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. 1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மோசடியான உயில் ஆவணத்திற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம்அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.